# பல்லவபுரம் நகராட்சி
# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
# (ந.க.எண்.1373/10/இ1)

பல்லவபுரம் நகராட்சில் பொதுநிதியின் கீழ் நகராட்சி பகுதிகளில் பணிகள் மேற்கொள்ளுவதற்கு மூடி முத்திரையிப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் 11.08.2010–ம் தேதி புதன்கிழமை மாலை 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை 3.30 மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி நமூனாவை 21.07.2010–ம் தேதி முற்பகல் 10.00 மணி முதல் 10.08.2010–. ம் தேதி மாலை 4.00 மணி அலுவலக வேலை நாட்களில் நகராட்சி சேவை மையத்தில் உரிய தொகையினை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மேலும் இந்நகராட்சியின் இணைதள முகவரியில் (http://municipality.tn.gov.in/tenders) ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை தபாலில் பெற விரும்புவோர் ஒப்பந்தப்புள்ளி நமூனாவிற்கான விலையுடன் கூடுதலாக ரூ.200/–க்கான வங்கி வரைவோலையை ஆணையாளர், பல்லவபுரம் நகராட்சி பெயரில் சென்னையில் மாற்றத்தக்கதாக எடுத்து கோரிக்கை கடிதத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஒப்பந்தப்புள்ளி நமூனா கிடைக்கப் பெறாமல் இருந்தாலோ அல்லது தாமதமாக கிடைத்தாலோ அதற்கு ஆணையாளர் பொறுப்பாக மாட்டார். கூடுதல் விவரம் தேவைப்படின் நகராட்சி பொறியியல் பிரிவில் கேட்டும் அல்லது நகராட்சியின் மின் அஞ்சல் முகவரி மூலமாக கேட்டும் (commr.pallavapuram@tn.gov.in) தெரிந்துக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத் தொகையை 01.01.2010–க்கு பின் எடுக்கப்பட்ட தேசிய சேமிப்பு பத்திரமாக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து சமர்பிக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி நாள் அலுவலக விடுமுறை நாளாக இருந்தால் அடுத்த அலுவலக வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் ஏற்கவோ, அல்லது நிராகரிக்கவோ நகர் மன்றத்திற்கு முழு உரிமையுண்டு. மேலும் இதர விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்துக் கொள்ளலாம்.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தப் புள்ளி நமுனா விலை ரூ. | டெபாசிட் தொகை ரூ. | வேலை முடிக்க வேண்டிய கால அளவு (மாதத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | வார்டு எண்.3 காமராஜ் நகர் 1,2,3,4 தெருக்களில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 4.00 | 845/– | 4000/– | 60 நாட்கள் |
| 2 | வார்டு எண்.3 நாகரத்தினம் தெருவிற்கு சிமெண்ட் தளம் அமைத்தல் | 5.40 | 1689/– | 5400/ | 60 நாட்கள் |
| 3 | வார்டு எண்.3 முனுசாமி மேஸ்திரி தெருவிற்கு சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் | 2.50 | 845/– | 2500/– | 60 நாட்கள் |
| 4 | வார்டு எண்.3 கம்பர் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 2.50 | 845/– | 2500/– | 60 நாட்கள். |
| 5 | வார்டு எண்.3–ல் இரண்டு இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து கைபம்பு அமைத்தல் | 1.00 | 338/– | 1000/– | 30 நாட்கள். |

ஆணையாளர்
பல்லவபுரம் நகராட்சி

பெறுநர்
அனைத்து உள்ளூர் மற்றும் வெளியூர் அங்கீகாரம் பெற்ற ஒப்பந்ததாரர்கள்.

நகல்

1. நகர மன்றத் தலைவர் அவர்களின் தகவலுக்காக
2. நகர மன்ற உறுப்பினர்கள்
3. ஆணையாளர் மற்றும் பொறியாளர் மேசைக்கு
4. கணக்கர் / மேலாளர் மேசைக்கு
5. உதவி பொறியாளரின் உரிய நடவடிக்கைக்கு
6. விளம்பர பலகை.